www.kalvikural.com

**தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

ந.க. எண் 35244/ டி1 / 2014, நாள் 29.12.2014

பொருள் : தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி – 2014–2015 ஆம் ஆண்டில் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் – 42 தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகள் – தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு – கலந்தாய்வு மூலம் நிரப்புதல் – சார்ந்து.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண் 200, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 02.12.2014
2. அரசாணை (நிலை) எண் 201, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 02.12.2014
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண் 021786/கே4/2014, நாள் 04.12.2014

... ... ...

தமிழகத்தில் 2014–2015 ஆம் ஆண்டில் 128 புதிய ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு 128 புதிய தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதே போல 2014–2015ஆம் கல்வி ஆண்டில் 42 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்கு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி, முதல் பணியிடமான 42 கணிதம் / அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 128 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கும், 42 கணிதம் / அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கும் (கணிதம் / அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பணியில் எவர் மூத்தவரோ அவருக்கு அப்பாடத்திற்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும்) 30.12.2014 அன்று ஒளிவு மறைவற்ற பதவி உயர்வு கலந்தாய்வு மூலம் நடத்துமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

www.kalvikural.com

2. ஊட்டுப் பதவியில் ஏற்படக்கூடிய தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கும், வேறு ஏதேனும் காலிப் பணியிடம் இருப்பின் அவற்றினையும் 30.12.2014 அன்று ஒளிவு மறைவற்ற பதவி உயர்வு கலந்தாய்வு மூலம் எந்தவித புகாருக்கும் இடமளிக்காமல் நடத்துமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

3. உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடையாணை பெற்றுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

**தொடக்கக் கல்வி இயக்குநர்**

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்